Information pack for refugees

# Refugee Council
## help and advice

Tamil

# அகதிகளுக்கான
# தகவல் தொகுப்பு

**March 2010**

British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom
VAT no: 936 519 988

## அறிமுகம்

இத்தகவல் தொகுப்பு, யூகேயில் அடைக்கலம் நாடியுள்ள நபர்களுக்கும், அங்கு தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களுக்கும் உதவும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. உங்களுக்கு அகதி அந்தஸ்து (refugee status), மனிதாபிமானப் பாதுகாப்பு (humanitarian protection), தன்விருப்பத்தினாலான அனுமதி (discretionary leave) அல்லது காலவரையறையின்றி இருக்க அனுமதி (indefinite leave to remain) இருந்தால், உங்களுக்கு யூகேயில் உள்ள மற்ற குடியிருப்போர் மற்றும் குடிமக்களைப் போலவே சேவைகளைப் பெறுகின்ற அதே உரிமைகள் மற்றும் தகுதிகள் பொதுவாக உண்டு. இப்போது வேலை செய்வதற்கான அனுமதி உங்களுக்கு இருப்பதுடன், மற்ற யூகே குடியிருப்போரைப் போலவே சுகாதார சேவைகளையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் மற்றும் வீட்டுவசதிக்கும், நல ஆதாயங்களுக்கும் நீங்கள் விண்ணப்பிக்கலாம். அடுத்த சில மாதங்களில் நீங்கள் தங்கியிருப்பதற்கான அனுமதி காலாவதியானால், நீங்கள் தங்கியிருப்பதை நீட்டிப்பதற்காக நீங்கள் சட்ட ஆலோசனையைப் பெற வேண்டும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும், *சட்ட ஆலோசனை* என்ற பிரிவு 9-ஐ பார்க்கவும்.

ஒவ்வொரு நபரின் சூழ்நிலைகளும் வேறுபட்டதாக இருப்பதாலும், அவர்களுக்கு பல்வேறு வகையிலான ஆலோசனைகள் தேவைப்படுவதாலும், இத்தொகுப்பில் உள்ள விவரங்கள் முழுமையாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டவை அல்ல. இருப்பினும், இதிலுள்ள விவரங்கள் உங்கள் உடனடி கவலைகள் சிலவற்றை தீர்ப்பதற்கு உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

குடிமக்கள் ஆலோசனை (Citizen's Advice) சேவை போன்ற உங்களுக்கு மேலும் விரிவான விவரங்களை அளிக்கக்கூடிய அமைப்புகள் ஏராளமாக உள்ளன. உள்ளூரிலேயே உங்களுக்குக் கிடைக்கக்கூடிய சேவைகளைப் பற்றி நீங்கள் தெரிந்து வைத்திருப்பது மிகவும் முக்கியமாகும். இத்தொகுப்புடன், உங்கள் பகுதியிலுள்ள குடிமக்கள் ஆலோசனை மன்றம் (Citizens Advice Bureau), வேலைவாய்ப்பு மையம் (Jobcentre Plus), சட்ட மையம் (Law Centre) மற்றும் வீட்டுவசதி அலுவலகம் (Housing office) ஆகியவற்றின் தொடர்புக்கான விவரங்களை நீங்கள் பெற வேண்டும். இத்தொகுப்பில், பல பயனுள்ள வலைத்தளங்களின் விவரங்களை நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு கணினியை உங்களால் அணுக முடியாவிட்டால், உங்கள் உள்ளூர் நூலகம் அல்லது ஒரு சமுதாய மையத்தில் உள்ள ஒரு கணினியை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### உள்ளடக்கம்

இத்தொகுப்பில், கீழ்க்கண்டவை குறித்த விவரங்களை நீங்கள் காண்பீர்கள்:

1. அலுவல்சார்ந்த ஆவணங்கள்
2. நல நன்மைகள் மற்றும் வரி வரவுகள்
3. வீட்டுவசதி
4. உடல்நல பராமரிப்பு
5. வயதுவந்தோருக்கான கல்வி
6. பயண ஆவணங்கள்
7. குடும்ப மறுஇணைப்பு
8. ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்குதல்
9. சட்ட ஆலோசனை

### ஆலோசனை எங்கு பெற வேண்டும்

நீங்கள் யூகேயில் தங்குவதற்கு இப்போது அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், நீங்கள் பெறுவதற்கு உரிமையுள்ள சேவைகளை எவ்வாறு அணுக வேண்டும் என்பது குறித்த உதவி மற்றும் ஆலோசனையை நீங்கள் பெற வேண்டியது முக்கியமாகும். இலவச ஆலோசனை மற்றும் தகவல்களை அளிப்பதற்கு ஏராளமான அமைப்புகள் உள்ளன. ஆலோசனை பெறுவதற்கு நீண்ட நேரமாகலாம், எனவே காத்திருப்பதற்கு தயாராக இருக்கவும் அல்லது வேறொரு நாள் திரும்ப வரவும். யூகே எல்லை முகமை (UK Border Agency) ஆவணங்கள் மற்றும் பிற முகமைகளிடமிருந்து பெற்ற கடிதங்கள் போன்ற தனிப்பட்ட ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

### மொழிபெயர்ப்பாளர்கள்
உங்களால் ஆங்கிலம் பேச முடியாவிட்டால், ஒரு மொழிபெயர்ப்பாளரை அளிக்கும்படி நீங்கள் அமைப்புகளிடம் கேட்டுக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவைப்படும் சேவைகளை நீங்கள் பெறுவதை உறுதி செய்வதற்காக பல உள்ளூர் மற்றும் தேசிய அரசு அமைப்புகள் மொழிபெயர்ப்பாளர் ஒருவரை அளிக்க வேண்டும்.

### தகவல்களின் ஆதாரங்கள்
பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு, வீட்டுவசதி, நல நன்மைகள் மற்றும் பிற தலைப்புகளை அகதி மொழிகளில் பின்வரும் வலைத்தளத்தில் காணலாம்: http://languages.refugeecouncil.org.uk
வேலை வாய்ப்பு, வீட்டுவசதி அல்லது சட்ட அமைப்பு போன்ற தலைப்புகள் மீதான ஆலோசனை வழிகாட்டிகளின் அனைத்தையும் உள்ளடக்கிய வரிசை பின்வரும் வலைத்தளத்தில் கிடைக்கும்: www.citiznesadvice.org.uk (ஆங்கிலத்தில் மட்டும்).
உங்கள் உள்ளூர் நூலகம் அல்லது ஓர் உள்ளூர் அமைப்பின் வலைத்தளத்தில் ஏராளமான பயனுள்ள விவரங்கள் கிடைக்கக்கூடும்.

***இத்தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அச்சகத்திற்கு செல்லும் நேரம் வரை சரியானவையாகும் மற்றும் பின்னொரு தேதியில் மாற்றத்திற்கு உட்படக்கூடும்.***

**உங்கள் அடைக்கல கோரிக்கை மீது எடுக்கப்பட்ட ஒரு முடிவை நீங்கள் வைத்திருக்கும் நிலையில், நீங்கள் யூகே எல்லை முகமையால் (UK Border Agency - UKBA)யால் வழங்கப்படும் தங்குமிடவசதியில் இருந்தாலோ மற்றும்/அல்லது UKBAவின் உதவியைப் பெற்றாலோ, இது 28 நாட்களுக்குப்பின் முடிந்துவிடும். உங்கள் தங்குமிட வசதியிலிருந்து நீங்கள் வெளியேறி, வேறொரு உதவியைப் பெற வேண்டியிருக்கும்.**

## 1. அலுவல் சார்ந்த ஆவணங்கள்

நீங்கள் வேலைக்காகவோ அல்லது நல நன்மைக்காகவோ அல்லது வீட்டுவசதிக்காகவோ விண்ணப்பிக்கும்போது, உங்கள் அடையாளம் மற்றும் இந்த சேவைகளைப் பெறுவதற்கு உங்களுக்குள்ள உரிமைகள் பற்றி உங்களிடம் கேட்கப்படும். நீங்கள் காட்ட வேண்டிய, யூகேயில் தங்குவதற்கு நீங்கள் அனுமதிக்கப்பட்டபோது நீங்கள் பெறுகின்ற ஆவணங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

### அடைக்கல கோரிக்கை கடிதத்தின் மீதான நிர்ணயம் (Determination of asylum claim letter)
உங்கள் அடைக்கல கோரிக்கை மீது நீங்கள் ஒரு சாதகமான முடிவைப் பெற்றிருந்தால், யூகே எல்லை முகமை (UK Border Agency - UKBA) உங்களுக்குக் கடிதம் எழுதுவார்கள். உங்களுக்கு என்ன அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என்பதை இக்கடிதம் குறிப்பிடும்: இவை அகதி அந்தஸ்து, மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி அல்லது காலவரையறையின்றி இருக்க அனுமதி ஆகியவையாகும். உங்களுக்கு சாதகமான முடிவு வழங்கப்பட்டிருப்பதற்கான சான்றாக இக்கடிதம் அமையாது.

### குடிவரவு அந்தஸ்து ஆவணம் (Immigration Status Document)
இது உங்கள் அடையாளம் மற்றும் குடிவரவு அந்தஸ்தை உறுதிசெய்து UKBA வழங்கும் ஓர் அலுவல் சார்ந்த ஆவணமாகும். இதில் உங்கள் புகைப்படம், உங்களைப் பற்றிய தனிப்பட்ட விவரங்கள், உங்கள் அந்தஸ்து மற்றும் எத்தனை காலத்திற்கு நீங்கள் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது ஆகிய விவரங்கள் அடங்கியிருக்கும். சாதகமான முடிவு குறித்த கடிதத்தை நீங்கள் பெற்ற சிறிது காலத்திற்குள் இந்த ஆவணத்தையும் நீங்கள் பெற வேண்டும். இந்த ஆவணத்தை நீங்கள் பெறாவிட்டால், அதைப் பற்றி கேட்பதற்கு *அடைக்கல கோரிக்கை கடிதத்தின் மீதான நிர்ணயம்*-ல் உள்ள தொலைபேசி எண்ணில் நீங்கள் அழைக்க வேண்டும். இந்த ஆவணத்தைப் பரிசீலிப்பதற்காக, புகைப்படங்களை அனுப்பும்படி UKBA உங்களிடம் கேட்க வேண்டியிருக்கலாம். உங்களுக்கு ஒரு சாதகமான முடிவு அளிக்கப்பட்டிருப்பதற்கு இந்த ஆவணம் ஒரு சான்றாகும்.

**தேசிய அடைக்கல உதவிச் சேவையின் முடித்தலுக்கான கடிதம்**
**(NASS Termination Letter)**
நீங்கள் UKBAவிடமிருந்து நிதிசார்ந்த/வீட்டுவசதி உதவியை பெற்றுக் கொண்டிருந்து, உங்கள் கோரிக்கை மீதான ஒரு முடிவையும் பெற்றிருந்தால், இந்த உதவி 28 நாட்களுக்குப்பின் நிறுத்தப்பட்டுவிடும். இந்த உதவி எப்போது நிறுத்தப்படும் மற்றும் உங்கள் இறுதி தொகையளிப்பை நீங்கள் எப்போது பெறுவீர்கள் என்பதைத் தெரிவித்து UKBA உங்களுக்குக் கடிதம் எழுதும். உங்கள் UKBA உதவி முடிந்துவிட்டதற்கான சான்றாக இக்கடிதம் அமையாது.

**NASS 35**
UKBA ஆதரவை நீங்கள் பெற்றுக் கொண்டிருந்தால், உங்களுக்கு ஒரு முடிவு வழங்கப்படும்போது இப்படிவத்தை UKBA உங்களுக்கு அனுப்பி வைக்கும். இந்த ஆவணம் உங்கள் புகைப்படம் ஒன்றைக் கொண்டிருப்பதுடன், நீங்கள் என்ன உதவியைப் பெற்றிருக்கிறீர்கள் என்ற விவரத்தையும் அளிக்கும். நல நன்மைகள் மற்றும் வீட்டுவசதியைப் பெறுவதற்கு முன்பு இது உங்களுக்குத் தேவைப்படும். உங்கள் அடைக்கல ஆதரவு முடிவடைகிறது என்பது உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தும், நீங்கள் இந்த ஆவணத்தைப் பெற்றிராவிட்டால், பின்வரும் எண்ணில் அழைக்கவும்: 0845 602 1739.

**தேசிய காப்பீட்டு எண்**
தேசிய காப்பீட்டு (NI) எண் என்பது, யூகேயில் வேலை செய்வதற்கு அல்லது உதவியைப் பெறுவதற்கு உங்களுக்குத் தேவைப்படும் ஒரு தனிப்பட்ட குறிப்பு எண்ணாகும். உங்களுக்காக ஒரு NI எண்ணுக்கு UKBA விண்ணப்பித்திருக்கக் கூடும். உங்களுக்கு அந்தஸ்து வழங்கிய கடிதத்தில் உள்ள தொலைபேசி எண்ணில் அழைத்து இதனை உறுதிசெய்து கொண்டு, அவர்கள் விண்ணப்பித்துள்ளனரா என்று கேட்கவும். UKBA NI எண்ணுக்கு விண்ணப்பித்திராவிட்டால், மற்றும் வேலை செய்வதற்காக உங்களுக்கு அது தேவைப்பட்டால், அதற்காக விண்ணப்பிப்பதற்கு 0845 6000 643 என்ற எண்ணில் அழைக்கவும். ஓர் நேர்காணலுக்காக வேலைவாய்ப்பு மையத்திற்கு (Jobcentre Plus) (பார்க்கவும் 2) செல்லும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள். விரைவாக ஒரு NI எண்ணை நீங்கள் பெற வேண்டியது முக்கியமாகும்.

**அவ்வாறு செய்யும்படி நீங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டாலன்றி, உங்கள் அசல் ஆவணங்களை அஞ்சல் மூலம் நீங்கள் அனுப்பக்கூடாது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். அசல் ஆவணங்களை நீங்கள் அவசியம் அனுப்ப வேண்டியிருந்தால், அஞ்சலகத்தில் 'பதிவு அஞ்சல்' ('registered post') வேண்டுமென்று கேட்கவும். பெரும்பாலான சமயங்களில் உங்கள் அசல் ஆவணங்களின் நகல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.**

## 2. நல நன்மைகள் (Welfare benefits) மற்றும் வரி வரவுகள் (tax credits)

அடிப்படை வாழ்க்கைப் படி வழங்குவதன் மூலம், வருமானம் ஏதுமில்லாத நபர்களுக்கு யூகே அரசு உதவி வழங்கக்கூடும். இந்த அடிப்படை வாழ்க்கைப் படி, நல நன்மை என்று அழைக்கப்படுகிறது.

வேலை செய்த போதிலும், வருமானம் மிகக் குறைவாக உள்ள நபர்களுக்கு வரி வரவுகள் அளிப்பதன் மூலமும் அரசு உதவக்கூடும்.

**எனது அடைக்கல விண்ணப்பத்தின் மீது நான் ஒரு சாதகமான முடிவைப் பெற்றிருக்கிறேன் மற்றும் எனக்கு சிறிது உதவி தேவைப்படுகிறது; என்னால் நல நன்மையைப் பெற முடியுமா?**

அகதி அந்தஸ்து, மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி அல்லது காலவரையறையின்றி இருக்க அனுமதி ஆகியவை பெற்றுள்ள நபர்கள் நல நன்மைகளைப் பெறலாம். நீங்கள் தற்போது வேலையில் இல்லாத காரணத்தால் வருமானம் இல்லாத இல்லாத நிலையில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், இந்த விவரத்தை நீங்கள் வேலைவாய்ப்பு மையம் என்றழைக்கப்படும் அரசுத் துறைக்கு அளிக்க வேண்டும். இது 'கோரிக்கை அளித்தல்' அல்லது ஒரு நல நன்மைக்காக 'விண்ணப்பித்தல்' என்று அழைக்கப்படுகிறது.

நீங்கள் பெறும் நன்மைகளின் அளவு உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளைச் சார்ந்ததாகும்; உங்களுக்கு ஒரு துணை இருந்தாலோ அல்லது உங்களுக்குக் குழந்தைகள் இருந்தாலோ, அது தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

வேலை செய்யும் வயதுடைய நபர்களுக்கு மூன்று அடிப்படை நல நன்மைகள் உள்ளன. அவை ஓர் அடிப்படை வாழ்க்கைப் படியை அளிக்கின்றன மற்றும் அதனை நீங்கள் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பெறுவீர்கள். அவை பின்வருமாறு:

- **வேலை தேடுவோருக்கான படி (Jobseeker’s Allowance)**

இத்தொகை வேலை செய்யக்கூடியவர்கள் மற்றும் வேலை தேடிக் கொண்டிருப்பவர்கள், ஆனால் வேலையில்
இல்லாதவர்களுக்காக உள்ளது. தாங்கள் வேலை தேடிக் கொண்டிருப்பதை வேலைவாய்ப்பு மையத்திற்கு நிரூபிக்கக்கூடியவர்களால் இந்த நல நன்மையைப் பெற முடியும்.

வாரத்தில் அதிகபட்சமாக 16 மணிநேரத்திற்கு கல்லூரிக்கு அல்லது ஆங்கில வகுப்பிற்கு சென்று வேலை தேடுவோருக்கான படியை நீங்கள் பெறலாம். வாரத்திற்கு 16 மணி நேரத்திற்கும் குறைவாக நீங்கள் வேலை செய்தாலும் உங்களால் வேலை தேடுவோருக்கான படியைப் பெறமுடியும்.

- **பணி உதவிப் படி (Employment Support Allowance)**

வேலை செய்வதைக் கடினமாக்கும் அளவிற்கு உடல்நலக் குறைவு அல்லது உடல் குறைபாடு உள்ளதன் காரணமாக வேலை செய்ய முடியாதவர்களுக்காக இத்தொகையளிப்பு உள்ளது. இந்த நல நன்மைக்கு நீங்கள் விண்ணப்பிக்க விரும்பினால், உங்கள் மருத்துவரிடமிருந்து நீங்கள் ஒரு மருத்துவச் சான்றை (சுகமின்மை குறிப்பு) அளிக்க வேண்டும். உங்களுக்கு உடல்நலக் குறைவு அல்லது உடல் குறைபாடு இருந்தாலும் உங்களால் வேலை செய்ய முடியும் என்று வேலைவாய்ப்பு மையம் முடிவு செய்யக்கூடும். இவ்வாறு அவர்கள் முடிவு செய்தால், உங்கள் நல நன்மை தொகையளிப்புகளை அவர்கள் நிறுத்திவிடக்கூடும்.

- **வருமான உதவி (Income Support)**

இத்தொகையளிப்பு இளம் குழந்தைகளையுடைய ஒற்றை பெற்றோருக்கானதாகும். ஒற்றையாக உள்ள பெற்றோரால் தாங்களாகவே தங்கள் குழந்தைகளை பராமரிப்பது மிகவும் சிரமம் என்று அரசு நம்புவதால், அது இதனை வழங்குகிறது. தாங்கள் வேலை தேடிக் கொண்டிருப்பதற்கான சான்றை வேலைவாய்ப்பு மையத்திற்கு ஒற்றையாக உள்ள பெற்றோர்கள் காட்ட வேண்டியதில்லை.

அகதி அந்தஸ்துள்ள, 1 ஆண்டுக்கும் குறைவாக யூகேயில் உள்ள நபர்கள் வருமான உதவிக்கு விண்ணப்பிக்கலாம் மற்றும் முழுநேரம் ஆங்கிலம் கற்கலாம். வருமான உதவிக்கு அவர்கள் விண்ணப்பிப்பதற்குமுன், முழுநேர (பிரதி வாரம் 16 மணிக்கும் மேல்) ஆங்கில பாடப்பயிற்சியில் நீங்கள் சேர்ந்திருக்க வேண்டும்.

முழுநேர ஆங்கில பாடப்பயிற்சியில் இடம் பிடிப்பதற்கு சில சமயங்களில் நீண்ட காலமாகலாம். எனவே வருமான உதவிக்கு நீங்கள் விண்ணப்பிக்க விரும்பினால், முழுநேர ஆங்கில பாடப்பயிற்சியில் இடம் கிடைப்பதற்காக நீங்கள் காத்திருக்கும் சமயத்தில், இன்னொரு நன்மைக்கு நீங்கள் முதலில் விண்ணப்பிக்க வேண்டியிருக்கலாம்.

### ஒரு நல நன்மைக்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

வேலை தேடுவோருக்கான படி, வருமான உதவி அல்லது பணி உதவிப் படிக்காக விண்ணப்பிப்பதற்கு **0800 055 66 88** என்ற எண்ணில் அழைத்து, ஓர் ஆலோசனையாளருடன் பேசவும். நீங்கள் ஆங்கிலம் பேசாதவராக இருந்தால், உங்கள் சார்பில் அழைக்கும்படி ஒரு நண்பரைக் கேட்டுக் கொள்ளவும்.

### வேலை செய்யும் வயதைவிட எனக்கு அதிக வயதாகிறது, நான் எதற்கு விண்ணப்பிக்க வேண்டும்?

உங்களுக்கு 60 அல்லது அதற்கும் அதிகமான வயதாகியிருந்தால், நீங்கள் ஓய்வூதிய வரவுக்காக (Pension Credit) விண்ணப்பிக்க முடியும். நீங்கள் 0800 991 234 என்ற எண்ணில அழைப்பதன் மூலம் விண்ணப்பிக்கலாம். நீங்கள் ஆங்கிலம் பேசாதவராக இருந்தால், ஒரு மொழிபெயர்ப்பாளருடன் உங்களைத் திரும்ப அழைப்பதற்கு ஆலோசனையாளர் ஏற்பாடு செய்யக்கூடும். உங்கள் கோரிக்கைக்கு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே உங்களுக்கு பணமளிக்கப்படலாம்; தொலைபேசியில் அழைக்கும்போது இதைச் செய்யும்படி கேட்டுக் கொள்ளவும்.

### ஒரு நல நன்மைக்கு நான் விண்ணப்பிக்க வேண்டியுள்ளது, ஆனால் என்னிடம் தேசியக் காப்பீடு (National Insurance) எண் இல்லை, அப்படியும் என்னால் விண்ணப்பிக்க முடியுமா?

ஆம். தேசியக் காப்பீடு எண் இல்லாமலேயே ஒரு நல நன்மைக்கு விண்ணப்பிக்க முடியும். நல நன்மை தொகையளிப்புகளை பெறுவதற்கும், யூகேயில் வேலை செய்வதற்கும் உங்களுக்கு ஒரு தேசியக் காப்பீடு எண் அவசியம் தேவைப்படும். இருப்பினும், ஒரு தேசியக் காப்பீடு எண்ணைப் பெறுவதற்கு முனனதாக நீங்கள் ஒரு நல நன்மைக்கு விண்ணப்பிக்கலாம். நன்மைகளுக்காக விண்ணபிப்பதை தாமதிக்க வேண்டாம்; தொகைகளை நீங்கள் தவற விட்டுவிடுவீர்கள்.

### எனது நல நன்மையை நான் பெறுவதற்கு எவ்வளவு காலமாகும்?

நீங்கள் விண்ணப்பித்த உடனேயே நல நன்மைகள் வழங்கப்படமாட்டாது; அவை பரிசீலிக்கப்படுவதற்கு 28 நாட்கள் அல்லது அதற்கும் அதிகமாகலாம். இக்காலகட்டத்தில், நீங்கள் பணம் எதுவும் பெறமாட்டீர்கள், ஆனால் ஆதாயம் பரிசீலிக்கப்பட்டபின், நீங்கள் முதன்முதலில் விண்ணப்பித்த நாள் முதல் உங்களுக்குப் பணம் வழங்கப்படும்.

பெரும்பாலான நன்மைகள் நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். உங்களுக்கு ஒரு கணக்கு இல்லாவிட்டால், நீங்கள் அஞ்சலகத்தில் ஒன்றைத் தொடங்கலாம், பக்கம் 15-ஐ பார்க்கவும்.

உங்களுக்கு எந்தவொரு வருமானமும் இல்லாத நிலையில், உடனடியாக உங்களுக்கு நிதி உதவி தேவைப்பட்டால், பக்கம் 6ல் உள்ள **நெருக்கடி காலக் கடன்கள் (Crisis Loans)** பற்றிய விவரங்களைப் பார்க்கவும்.

### நீண்ட காலமாக நான் எந்தத் தொகையையும் பெறவில்லை, நான் என்ன செய்ய வேண்டும்?

பணம் அளிக்கப்படுவதற்குமுன் நீங்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டிருந்தால், தங்களுக்குத் தேவையான விவரங்கள் அனைத்தையும் அவர்கள் பெற்று விட்டார்களா என்பதை உறுதி செய்வதற்காக உங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மையத்தைக் கேட்கவும்.
ஓர் இடைக்கால தொகையளிப்புக்கு (Interim Payment) நீங்கள் தகுதி பெறக்கூடும். பக்கம் 6-ஐ பார்க்கவும்.

## வேலைவாய்ப்பு மையம் (Jobcentre Plus)

பெரும்பாலான நல நன்மைகளை வழங்குவதற்கும், வேலையில் அமர்வதற்கு மக்களுக்கு உதவுவதற்கும் வேலைவாய்ப்பு மையங்கள் பொறுப்பேற்றுள்ளன. அவை பல உள்ளூர் பிரதான தெருக்களில் அமைந்துள்ளன. பெரும்பாலான நல நன்மைகளுக்கான தொடர்பு மையங்களாகவும் அவை உள்ளன.

வேலை தேடுவோருக்கான படி, வருமான உதவி அல்லது பணி உதவிப் படிக்கு நீங்கள் தொலைபேசி மூலம் விண்ணப்பித்திருந்தால், நீங்கள் அவர்களுக்குக் கூறியுள்ளதை உறுதி செய்வதற்காக நீங்கள் வேலைவாய்ப்பு மையத்திற்கு செல்லும்படி கேட்டுக் கொள்ளப்படலாம். வேலைவாய்ப்பு மையம் உங்களுக்குக் கூறியுள்ள அறிவுறுத்தல்களை நீங்கள் பின்பற்றுவது முக்கியமாகும், ஏனென்றால், அவ்வாறு நீங்கள் செய்யாவிட்டால், உங்கள் நல நன்மை தொகையளிப்புகளை அவர்கள் நிறுத்திவிடக்கூடும்.

உங்கள் நன்மைகளப் பெறுவதில் உங்களுக்குப் பிரச்னைகள் இருந்தால், உங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மையத்தை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களால் உதவ முடியாவிட்டால், வேலைவாய்ப்பு மையத்திடமிருந்து ஏற்கனவே நீங்கள் பெற்றுள்ள ஏதேனும் கடிதங்களின் மேல்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணில் அழைக்கவும். ஏதேனும் அலுவல்சார்ந்த ஆவணங்களின் பிரதிகளை நீங்கள் எடுக்க வேண்டியிருந்தால், உங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மையத்தினால் உங்களுக்கு 'சரிபார்க்கப்பட்ட' பிரதிகளை எடுத்துத் தரமுடியும். அஞ்சலில் அலுவல்சார்ந்த ஆவணங்களை அனுப்புவதைக் காட்டிலும் இது சிறந்த முறையாகும்.

## குடும்பங்கள் மற்றும் குழந்தைகளுக்கான நன்மைகள்

### எனக்குக் குழந்தைகள் உள்ளனர்; என்னால் ஏதேனும் கூடுதல் உதவி பெறமுடியுமா?

உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், நீங்கள் கருவுற்றிருந்தால் அல்லது குழந்தை பெறப்போகிறவராக இருந்தால், நீங்கள் கூடுதல் உதவிக்கு கோரிக்கை அளிக்கலாம். அகதி அந்தஸ்து, மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி அல்லது காலவரையறையின்றி இருக்க அனுமதி ஆகியவை உள்ள குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் அனைவருக்கும் பின்வரும் நன்மைகள் கிடைக்கும்.

- **குழந்தைக்கான நன்மை (Child Benefit)**

உங்களுக்கு 19 வயதிற்கும் குறைவான வயதுடைய குழந்தைகள் இருந்தால், குழந்தைக்கான நன்மையை நீங்கள் பெறக்கூடும். உங்களுக்கு 16 வயதிற்கும் குறைவான வயதுடைய குழந்தைகள் இருந்தால், குழந்தைக்கான நன்மையை உங்களால் பெறமுடியும்.

ஒரு படிவத்தைப் பயன்படுத்தி குழந்தைக்கான நன்மைக்கு விண்ணப்பிக்க வேண்டும். குழந்தைக்கான நன்மை உதவி எண்ணான (Child Benefit Helpline) 0845 302 1444ல் தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது www.direct.gov.uk என்ற வலைத்தளத்தை அணுகி, குழந்தைக்கான நன்மை படிவத்தை அச்சிட்டுக் கொள்வதன் மூலம் நீங்கள் ஒரு படிவத்தைப் பெறலாம்.

உங்கள் அடைக்கல கோரிக்கை மீதான சாதகமான முடிவைப் பெற்ற மூன்று மாதங்களுக்குள் நீங்கள் குழந்தைக்கான நன்மைக்கு விண்ணப்பித்தால், உங்கள் குழந்தைக்கான நன்மை தொகையளிப்புகள், உங்கள் அசல் அடைக்கல கோரிக்கையை நீங்கள் அளித்த தேதிக்கு பின்தேதியிடப்பட வேண்டும். குழந்தைக்கான நன்மைக்கு விண்ணப்பிக்கும்போது, இதனை படிவத்தின் மீது எழுதுவதன் மூலமோ அல்லது ஒரு கடிதத்தை இணைப்பதன் மூலமோ நீங்கள் இதற்காக கேட்டுக் கொள்ள வேண்டும்.

- **குழந்தைக்கான வரி வரவு (Child Tax Credit)**

குழந்தைக்கான வரி வரவு, மிகக் குறைந்த வருமானம் உள்ள அல்லது நல நன்மையை பெற்று வருகின்ற, குழந்தைகளை உடைய நபர்களுக்கு வழங்கப்படலாம். இதற்காக விண்ணப்பிப்பதற்கு வேலைவாய்ப்பு மையம் உங்களுக்கு உதவக்கூடும் மற்றும் கோரிக்கைகள் உங்கள் அசல் அடைக்கல கோரிக்கையை நீங்கள் அளித்த தேதிக்கு பின்தேதியிடப்பட வேண்டும் (மேலே பார்க்கவும்). வேலைவாய்ப்பு மையத்தின் உதவியைப் பெறுவதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், வரி வரவுகள் உதவி எண் 0845 300 3900-ல் தொடர்பு கொண்டு ஒரு படிவத்தைக் கேட்கவும்.

- **மகப்பேறு மான்யம் (Maternity Grant)**

நீங்கள் நல நன்மைகளைப் பெறுபவராக இருந்து, அடுத்த 11 வாரங்களுக்குள் குழந்தை பெறக்கூடியவராகவோ, அல்லது கடந்த மூன்று மாதங்களில் குழந்தை பெற்றவராகவோ இருந்தால், ஒரே தொகையாக £500 பெறுவதற்கு நீங்கள் தகுதி உடையவராவீர்கள். இதற்கு விண்ணப்பிப்பதற்கு நீங்கள் ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும், அதனை உங்கள் வேலைவாய்ப்பு மையத்தில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

- **கருத்தரிப்பு மான்யத்தில் ஆரோக்கியம் (Health in Pregnancy Grant)**

நீங்கள் குறைந்தது 25 வாரங்கள் கருவுற்றிருந்தால், நீங்கள் ஒரே தொகையாக £190 பெறலாம். உங்கள் மருத்துவர் அல்லது செவிலியரிடம் கோரிக்கைப் படிவத்தைக் கேட்டுப் பெறவும்; படிவத்தின் சில பகுதிகளை அவர்கள் பூர்த்தி செய்ய வேண்டும். மருத்துவர் அல்லது செவிலியரிடம் கோரிக்கைப் படிவங்கள் இல்லாவிட்டால், 0845 366 7885 என்ற எண்ணில் நீங்கள் அழைக்கலாம். படிவங்கள் உங்கள் மருத்துவர் அல்லது செவிலியருக்கு அனுப்பி வைக்கப்படும்.

### எனக்கு ஒரு குறைபாடு உள்ளது மற்றும் என்னைப் பார்த்துக் கொள்வதற்கு எனக்கு யாராவது தேவைப்படுகிறார்கள்; என்னால் ஏதேனும் கூடுதல் உதவி பெற முடியுமா?

யாராவது உங்களைப் பராமரிக்க வேண்டிய அளவிற்கு உங்களுக்குக் கடுமையான உடல்நலக்குறைவு அல்லது குறைபாடு இருந்தால், அல்லது உங்களுக்கு நடப்பதில் சிரமம் இருந்தால், நீங்கள் கூடுதல் உதவிபெறக்கூடும். இது ஊனமுற்றோர் வாழ்க்கைப் படி (Disability Living Allowance) அல்லது வருகைப் படி (Attendance Allowance) என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும், இதனை நீங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மையத்தில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது நன்மை விசாரணை எண்ணான (Benefit Enquiry Line) 0800 882 200-ல் அழைப்பதன் மூலம் நீங்கள் ஒன்றைக் கேட்டுப் பெறலாம்.

ஊனமுற்றோர் வாழ்க்கைப் படி அல்லது வருகைப் படி பெற்றுக் கொண்டிருக்கும் யாரையேனும் நீங்கள் பராமரித்து வந்தால், நீங்கள் கூடுதல் உதவியைப் பெறக்கூடும். இது பராமரிப்பாளர் படி (Carer's Allowance) என்று அழைக்கப்படுகிறது. நீங்கள் ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும், இதனை நீங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மையத்தில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது நன்மை விசாரணை எண்ணில் அழைப்பதன் மூலம் நீங்கள் ஒன்றைக் கேட்டுப் பெறலாம்.

நீங்கள் வேறொரு நல நன்மையைப் பெற்று வந்தால், உங்களால் பராமரிப்பாளர் படியைப் பெற முடியாது, ஆனால் உங்கள் தற்போதைய நன்மை மீது நீங்கள் ஒரு கூடுதல் தொகையைப் பெறலாம். நீங்கள் பராமரிப்பாளர் படியைப் பெற்றுக் கொண்டிருந்தால், நீங்கள் பராமரிக்கும் நபர் தனது நல நன்மையாக குறைந்த தொகையைப் பெறுகிறார் என்று அர்த்தம். நன்மை விசாரணை எண்ணில் அழைப்பதன் மூலம் பராமரிப்பாளர் படி மற்ற நன்மைகள் மீது என்ன விளைவை ஏற்படுத்துகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**நான் ஒரு நல நன்மைக்காக விண்ணப்பித்திருக்கிறேன், ஆனால் என்னிடம் பணம் இல்லை. நான் என்ன செய்ய வேண்டும்?**

### நெருக்கடி காலக் கடன்கள் (Crisis Loan)

உங்களிடம் பணம் இல்லாத நிலையில், உங்கள் நன்மை பரிசீலனை செய்யப்படுவதற்கு உங்களால் காத்திருக்க முடியாவிட்டால், நீங்கள் ஒரு நெருக்கடிக் கால கடனுக்கு விண்ணப்பிக்கலாம். இவை 0800 032 8345 என்ற எண்ணில் அழைப்பதன் மூலமாகவோ அல்லது உங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மையத்தைத் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ செய்யப்படலாம். சேமிப்புகள் ஏதுமில்லாத, தங்களுக்கு உதவுவதற்கு யாருமில்லாத மற்றும் உணவு வாங்குவதற்காக பணம் தேவைப்படும் நபர்களுக்கு மட்டும் நெருக்கடிக் கால கடன்கள் வழங்கப்படலாம்; மற்ற எந்தவொரு காரணத்திற்காகவும் இக்கடன்கள் வழங்கப்படமாட்டாது. நெருக்கடிக் கால கடன்கள் இரண்டு வார காலத்திற்கு வழங்கப்படுபவை என்பதால், இக்காலகட்டத்திற்கு உங்களுக்கு எவ்வளவு தேவைப்படும் என்பதை சிந்தித்து, அத்தொகையைக் கேட்கவும்.

இக்கடன் வேலைவாய்ப்பு மையத்தினால் வழங்கப்படுகிறது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்; இத்தொகையை நீங்கள் திரும்ப செலுத்த வேண்டும். இது வழக்கமாக வாரந்தோறும் சிறிய தொகைகளாக (சுமார் £3) உங்கள் நல நன்மை தொகையளிப்புகளிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

### இடைக்கால தொகையளிப்பு (Interim Payment)

நீங்கள் ஒரு நல நன்மைக்காக விண்ணப்பித்திருந்து, முதல் தொகையளிப்பை நீங்கள் நீண்ட காலமாகப் பெறாமல் இருந்தால், ஓர் இடைக்கால தொகையளிப்பை வழங்கும்படி உங்கள் வேலைவாய்ப்பு மையத்தை நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். உங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மையத்தினால் உதவ முடியாவிட்டால், வேலைவாய்ப்பு மையத்திடமிருந்து நீங்கள் பெற்ற கடிதத்தின் மேற்புறம் உள்ள எண்ணில் அழைத்து, அவர்களை ஓர் இடைக்கால தொகையளிப்பை வழங்கும்படி கேட்கவும்.

### நான் அதிகமாக பணம் சம்பாதிப்பதில்லை; எனக்கு கூடுதல் உதவி கிடைக்குமா?

வாரந்தோறும் நீங்கள் குறைந்தது 16 மணிநேரம் வேலை செய்தால், **பணியிலுள்ளோருக்கான வரி வரவு (Working Tax Credit)**-க்கு விண்ணப்பிப்பதன் மூலம் உங்களுக்காக/உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் கூடுதல் உதவி பெற வாய்ப்புள்ளது. ஒரு **வரி வரவு** (Tax Credit) படிவத்தைப் பெறுவதற்கு 0845 300 3900 என்ற எண்ணில் அழைக்கவும்.

### உங்கள் சூழ்நிலையில் மாற்றங்கள்

உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒன்று மாறினால், இயன்றவரை விரைவாக அதைப் பற்றி உள்ளூர் வேலைவாய்ப்பு மைய அலுவலகத்திற்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கான உதாரணங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

- திருமணம் செய்து கொள்ளுதல்
- முகவரியை மாற்றுதல்
- பணியில் சேருதல்
- நோயுறுதல் அல்லது உடல்நலக்குறைவால் பாதிக்கப்படுதல்
- நோய் அல்லது உடல்நலக்குறைவிலிருந்து முற்றிலுமாக மீளுதல்

மாற்றங்களைத் தெரிவிக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும், அவ்வாறு நீங்கள் செய்யாவிட்டால், நீங்கள் சட்டத்தை மீறுபவராகக் கருதப்படலாம்.
நல நன்மைகள் பற்றிய மேலும் விவரங்களுக்கு, அணுகவும் www.direct.gov.uk அல்லது www.citizensadvice.org.uk

## 3. வீட்டுவசதி

### நான் எப்போது UKBA தங்குமிட வசதியிலிருந்து வெளியேற வேண்டும்?

உங்கள் அடைக்கல கோரிக்கை மீது முடிவு எடுக்கப்பட்டிருந்தால், உங்கள் அடைக்கல உதவி **28 நாட்களுக்குப்பின்** நின்றுவிடும். உங்களுக்கு UKBA தங்குமிட வசதியை அளித்திருந்தால், 28 நாட்களில் நீங்கள் வெளியேற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவீர்கள். நீங்கள் சரியாக எப்போது வெளியேற வேண்டும் என்பதை உங்களுக்குக் கூறும் கடிதம் ஒன்றை நீங்கள் பெறுவீர்கள்.

### சமூக வீட்டுவசதி என்றால் என்ன?

சமூக வீட்டுவசதி என்பது வீட்டுவசதி தேவையுள்ள நபர்களுக்கு அவர்கள் வசதிக்கேற்ற வாடகையில் வழங்கப்படும் வீட்டுவசதியாகும். இது உள்ளூர் குழுக்கள் (councils) (உள்ளூர் அமைப்பு) அல்லது வீட்டுவசதி கூட்டமைப்புகளால் (housing associations) வழங்கப்படலாம் (இவை, தேவையுள்ள நபர்களுக்கு வீட்டுவசதியை வழங்கும் சுயேச்சையான லாப நோக்கற்ற அமைப்புகளாகும் மற்றும் அவ்வாறு செயல்படுவதற்கு அவை பெரும்பாலும் அரசு மானியங்களைப் பெறுகின்றன).

### உதவிக்கு நான் எங்கே செல்ல வேண்டும்?

உங்களுக்கு வாழ்வதற்கு இடம் ஏதும் இல்லாவிட்டால், உள்ளூர் குழு வீட்டுவசதித் துறையை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும்.

### உடனடியாக வாழ்வதற்கு எனக்கு ஓரிடம் தேவைப்படுகிறது

UKBA-வின் தங்குமிட வசதியிலோ, நண்பர்களுடனோ அல்லது உறவினர்களுடனோ நீங்கள் வாழ்பவராக இருந்து, அடுத்த 28 நாட்களில் நீங்கள் வெளியேற வேண்டுமென்று உங்களிடம் கூறப்பட்டால், வீடற்றவர் என்ற முறையில் நீங்கள் குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வாழ்வதற்கு ஓரிடத்தை நீங்கள் கண்டறிவதற்கான ஆலோசனையையும் உதவியையும் வழங்கும் சட்டபூர்வ கடமை குழுவுக்கு உள்ளது.

வீடற்றவர்களுக்கு, அல்லது வீடற்ற நிலையை அடையப் போகிறவர்களுக்கு மற்றும் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக **பாதிக்கப்படத்தக்கவர்களுக்கு** அவசரக்கால தங்குமிட வசதியை குழு வழங்க வேண்டும் என்றும் சட்டம் கூறுகிறது. நீங்கள் தெருவில் தூங்க வேண்டிய நிலையை ஏற்படுமானால், ஒரு சராசரி மனிதரைவிட உங்களுக்கு அதிக அளவில் இடர் இருப்பதையே இது குறிக்கிறது. இது உங்களுக்குப் பொருந்துவதாக குழு நம்புமானால், இதனை நீங்கள் தங்குமிட வசதிக்கான ‘முன்னுரிமைத் தேவை’யில் (‘priority need’) இருப்பது என்று அவர்கள் அழைக்கின்றனர்.

பல காரணங்களுக்காக மக்கள் பாதிக்கப்படத்தக்கவர்களாக ஆகிறார்கள், உதாரணமாக:

- குறைபாடுகள் அல்லது உடல்ரீதியான அல்லது மனவியல் ரீதியான உடல்நல பிரச்னைகள் கொண்ட நபர்கள்
- கருவுற்ற பெண்கள்
- குழந்தைகள் உள்ளவர்கள்

- 16 மற்றும் 17 வயதுடையவர்கள்
- சமூக சேவைகளால் பராமரிக்கப்படும் நபர்கள்
- தீ, வெள்ளம் அல்லது மற்ற பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்கள்
- வயதான நபர்கள்
- வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள்
- சிறையிலிருந்து அப்போதுதான் வெளியே வந்தவர்கள்
- போதை மருந்து மற்றும் மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள்

குழுவானது உங்கள் சூழ்நிலையை கவனத்துடன் பரிசீலித்து, உங்களுக்கு தங்குமிட வசதியைத் தங்களால் அளிக்க முடியுமா அல்லது முடியாதா என்பதை முடிவு செய்வார்கள். உங்களுக்கு உதவ முடியுமா என்பதை நிர்ணயிப்பதற்கு அவர்கள் உங்களைப் பேட்டி காண வேண்டியிருக்கும்.

### வீடற்ற நிலைக்கான விண்ணப்பத்தை அளிப்பதற்கு நான் எங்கு செல்ல வேண்டும்?

இயலுமானால் ஒரு சந்திப்பிற்கு ஏற்பாடு செய்து கொள்வதற்காக நீங்கள் குழுவின் வீட்டுவசதித் துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும், ஆனால் நீங்கள் அங்கே நேரடியாகச் சென்று, வீடற்ற நிலையைக் கையாளும் நபர் ஒருவரைக் காண வேண்டும் என்றுகூட கேட்கலாம்.
குழுக்கள் இயன்றவரையில் விரைவாக வீடற்ற விண்ணப்பதாரர்களை பேட்டி காண முயற்சிக்கின்றன. நீங்கள் உடனடியாக பேட்டி காணப்படலாம். அல்லது நீங்கள் மீண்டும் திரும்பி வருவதற்கான ஏற்பாடு ஒன்றையும் குழு செய்யக்கூடும். நீங்கள் உடனடியாக வீடற்ற நிலையில் இருப்பவரானால், குழுவானது உங்களை அதே நாளில் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

### பேட்டிக்கு என்னுடன் நான் எவற்றை எடுத்து வரவேண்டும்?

உங்களால் இயன்றவரை அதிகபட்ச ஆவணங்களையும், கடிதங்களையும் நீங்கள் எடுத்துவர வேண்டும், மிக முக்கியமாக:

- **அடையாளச் சான்று மற்றும் குடிவரவு அந்தஸ்து –** குடிவரவு அந்தஸ்து ஆவணம் அல்லது நீங்கள் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதைக் குறிப்பிடும் UKBAவிடமிருந்து வந்துள்ள கடிதம். குடும்பத்தில் உள்ள வேறு யாரேனும் நபர்களின் அடையாளம் மற்றும் அவர்களுக்கு உங்களுடனான உறவுமுறை ஆகியவற்றை உறுதி செய்யும் பிறப்பு சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களும் உங்களுக்குத் தேவைப்படும்.
- **உங்களுக்கு வீடில்லை என்பதற்கு அல்லது நீங்கள் வீடற்ற நிலையை அடையப் போவதற்கான சான்று -** UKBAவிடமிருந்து அல்லது நீங்கள் யாருடன் வாழ்ந்து வருகிறீர்களோ அந்நபரிடமிருந்து, நீங்கள் வெளியேற வேண்டிய தேதியைக் குறிப்பிடும் கடிதம்.
- **முகவரிச் சான்று -** குறிப்பாக அலுவல் சார்ந்த அமைப்புகள் அல்லது UKBAவிடமிருந்து பெறப்பட்ட கடிதங்கள்
- **பாதிக்கப்படத்தக்க நிலைக்கான சான்று -** உங்கள் குடும்பத்திலுள்ள யாருக்கேனும் மேலே பட்டியலிடப்பட்டுள்ள பிரச்னைகள் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்கள் அல்லது மற்ற ஆவணங்கள்.

### குழுவினால் எனக்கு உதவ முடியவில்லை, ஆனால் நான் வீடற்ற நிலையில் இருக்கிறேன்

சில வீட்டுவசதி அறக்கொடை அமைப்புகள் வீடற்ற நபர்களுக்கு அவசரக்கால தங்குமிட வசதியை அளிக்கின்றன. இவை ஹாஸ்டல்கள் (விடுதிகள்) அல்லது இரவுநேர தங்குமிடங்கள் என்று அழைக்கப்படுகின்றன, இவை பெரும்பாலும் பகிர்ந்து கொள்ளப்படுவதுடன், சிறிது காலம் தங்குவதற்காக மட்டுமே உள்ளவையாகும். பெரும்பாலான ஹாஸ்டல்களுக்கு நீண்ட காத்திருப்புப் பட்டியல்கள் இருக்கும் அல்லது அவை சில குறிப்பிட்ட விதிமுறைகளையும் கொண்டிருக்கக்கூடும், உதாரணமாக குறிப்பிட்ட வயதுடையவராக இருப்பவர்களுக்கு மட்டுமே அது வழங்கப்படலாம்.

உங்கள் உள்ளூர் குழுவிடமிருந்தோ அல்லது பின்வரும் வலைத்தளங்களில் தேடுவதன் மூலமாகவோ நீங்கள் ஹாஸ்டல்களின் பட்டியல் ஒன்றைப் பெறமுடியும்:

www.homelesslondon.org.uk
http://england.shelter.org.uk

இந்த வீடற்றவர்களுக்கான உதவி எண்களிலும் நீங்கள் அழைக்கலாம்:

**நெருக்கடி (Crisis) -** 0844 251 0111

**உறைவிடம் (Shelter)** - 0808 800 4444

**லண்டன் தெரு மீட்பு (London Street rescue)** - 0870 383 3333
www.thamesreach.org.uk; www.pavement.org.uk; www.stmungos.org/

உங்கள் உள்ளூர் குடிமக்கள் ஆலோசனை மன்றத்திற்குச் சென்று, ஹாஸ்டல்கள் அல்லது வீட்டுவசதி ஆலோசனை மையங்கள் பற்றிய விவரங்களை உங்களுக்குத் தரும்படி அவர்களை நீங்கள் கேட்கலாம்.

## குழுவின் வீட்டுவசதிக்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

ஒரு பிரிட்டனின் குடிமகனைப் போலவே, அகதி அந்தஸ்து, மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி ஆகியவை பெற்றுள்ள எவரும் குழுவின் வீட்டுவசதிக்காக விண்ணப்பிக்க முடியும். இருப்பினும், வீட்டுவசதி தேவைப்படுவோர் பலர் இருப்பதால், மிகவும் அவசரமாகத் தேவைப்படும் நபர்களுக்கு மட்டுமே குழுவால் அதனை அளிக்க முடியும். உங்கள் உள்ளூர் குழுவின் வீட்டுவசதித் துறையிடமிருந்து நீங்கள் ஒரு விண்ணப்பப் படிவத்தைப் பெறலாம்.

உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் உங்களுக்கு எந்த அளவிற்கு தங்குமிட வசதி தேவைப்படுகிறதென்று குழு முடிவு செய்து, உங்களுக்கு சில முன்னுரிமைப் புள்ளிகளை வழங்கும். உதாரணமாக, உங்கள் உடல்நலத்தைப் பாதிக்கக்கூடிய மிகவும் நெரிசலான அல்லது சுகாதாரமற்ற சூழ்நிலைகளில் நீங்கள் வாழ்ந்து வந்தால், காத்திருப்போர் பட்டியலில் நீங்கள் மிகவும் முன்னால் இருப்பீர்கள்.

## எந்தக் குழுவிடம் நான் செல்ல வேண்டும்?

நாட்டில் உள்ள எந்தக் குழுவிடமும் நீங்கள் விண்ணப்பிக்கலாம், ஆனால் அவர்களுடன் உங்களுக்கு உள்ளூர் தொடர்பு ஏதும் இல்லாவிட்டால், அவர்கள் உங்களை இன்னொரு பகுதிக்குப் பரிந்துரைப்பார்கள். பின்வரும் சூழ்நிலைகளில் உங்களுக்கு ஒரு பகுதியில் உள்ளூர் தொடர்பு இருப்பதாகக் கருதப்படும்:

- அங்கு பணி செய்தல்
- கடந்த பனிரெண்டு மாதங்களில் நீங்கள் அங்கு ஆறு மாதங்கள் வாழ்ந்திருத்தல் அல்லது கடந்த ஐந்து ஆண்டுகளில் மூன்று ஆண்டுகள் அங்கு வாழ்ந்திருத்தல்.
- ஐந்தாண்டுகளாக அங்கு வாழ்ந்துள்ள ஒரு நெருங்கிய குடும்ப உறுப்பினரைக் கொண்டிருத்தல்
- உங்கள் அந்தஸ்து பற்றிய முடிவை நீங்கள் பெற்றபோது UKBAவினால் அங்கு தங்குமிட வசதி அளிக்கப்பட்டிருத்தல்

## தனியார் வாடகை அடிப்படையிலான தங்குமிட வசதியை நான் எப்படிக் கண்டுபிடிப்பது?

ஒரு தனியார் வீட்டு உரிமையாளரிடமிருந்து வாடகைக்கு வீடு பெறுவது மட்டுமே பெரும்பாலும் முன்னுரிமைத் தேவை இல்லாத தனிநபர் மற்றும் குழந்தைகள் இல்லாத தம்பதிகளுக்கான ஒரே தேர்வாக உள்ளது. தனியாரிடமிருந்து வீடு வாடகைக்கு எடுப்பதில் பல ஆதாயங்கள்

உள்ளன, இதன் மூலம் ஓரளவு விரைவாக வீடுகளைப் பெற முடிவதுடன், அமைவிடம், உங்களுக்குப் பொருத்தமாக உள்ள வீட்டைப் பெறுதல் மற்றும் வீட்டுப்பொருட்களுடன் கூடிய அல்லது அவை இல்லாத வீடு உங்களுக்குத் தேவையா என்பதைத் தேர்ந்தெடுத்தல் போன்ற உங்கள் வீட்டுவசதித் தேவையின் பல அம்சங்களையும் நீங்கள் கட்டுப்பாட்டில் வைக்க முடியும். நீங்கள் எதை ஏற்கத் தயாராக உள்ளீர்கள் மற்றும் உங்கள் வசதிக்கு உங்களால் எதைப் பெற முடியும் என்பது குறித்து நடைமுறைக்கேற்றவாறு நீங்கள் இருப்பது மிகவும் முக்கியமாகும்.

இவற்றுக்காக நீங்கள் இணையம், அல்லது உள்ளூர் செய்தித்தாள்கள், கடை சாளரங்கள் மற்றும் அறிவிப்புப் பலகைகள் ஆகியவற்றில் பார்க்கலாம் அல்லது வாடகைக்கு வீடு ஏற்பாடு செய்யும் முகமை ஒன்றின் மூலம் தங்குமிட வசதியைப் பெறலாம்.

## தங்குமிட வசதிக்கு நான் எவ்வாறு பணம் செலுத்துவது?

உங்களுக்குக் குறைவான வருமானம் இருந்தால், அல்லது நீங்கள் நல நன்மைகளைப் பெற்று வந்தால், நீங்கள் வீட்டுவசதி ஆதாயம் (Housing Benefit) மற்றும் குழு வரி ஆதாயத்திற்கு (Council Tax Benefit) விண்ணப்பிக்கலாம். இது, தங்கள் வாடகை மற்றும் அல்லது குழு வரியை செலுத்துவதற்காக குழுவிடமிருந்து பெறப்படும் பணமாகும். சொத்தின் உரிமையாளருடன் குடியிருப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் நீங்கள் கையெழுத்திட்டிருந்தால் மட்டுமே உங்களால் இதற்கு விண்ணப்பிக்க முடியும் - இது குழுவாகவோ, ஒரு வீட்டுவசதி கூட்டமைப்பாகவோ அல்லது ஒரு தனியார் உரிமையாளராகவோ இருக்கலாம். நீங்கள் செலுத்த வேண்டிய வாடகை மற்றும் காலம், குடியிருப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள குடியிருப்பதற்கான ஒப்பந்தம் கொண்டிருக்கும். உங்கள் உள்ளூர் குழு வலைத்தளத்திலிருந்து நீங்கள் ஒரு வீட்டுவசதி மற்றும் குழு வரி ஆதாயத்திற்கான விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அவர்களுடைய அலுவலகத்திற்குச் சென்று ஒன்றைப் பெறலாம். இயன்றவரை விரைவாக இதனை குழுவின் வீட்டுவசதி ஆதாயத் துறையிடம் கொடுப்பது மிகவும் முக்கியமாகும்.

## எந்த அளவிற்கு நான் வீட்டுவசதி நன்மையைப் பெறுவேன்?

உங்களுக்கு வருமானம் ஏதும் இல்லாவிட்டால் அல்லது நீங்கள் ஒரு நல நன்மையை பெற்றுக் கொண்டிருந்தால், நீங்கள் வாழும் பகுதிக்கான சராசரி வாடகையை அரசு செலுத்தும். இது உள்ளூர் வீட்டுவசதிப் படி (Local Housing Allowance) என்று அழைக்கப்படுகிறது. உங்கள் வாடகைத் தொகை உள்ளூர் வீட்டுவசதிப் படியைவிட அதிகமாக இருந்தால், கூடுதலாக உள்ள வாடகையை நீங்கள்தான் செலுத்த வேண்டும். உங்களுக்கு 25 வயதிற்குக் குறைவாக இருந்தால், பகிர்ந்து கொள்ளப்படும் வீட்டில் ஓர் அறையைப் பெறுவதற்குப் போதுமான அளவு வீட்டுவசதி ஆதாயத்தை மட்டுமே நீங்கள் பெறுவீர்கள். குடியிருப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுவதற்குமுன் நீங்கள் எந்த அளவிற்கு வீட்டுவசதி ஆதாயம் பெற தகுதி உள்ளவராக இருக்கிறீர்கள் என்பதை அறிந்திருப்பது மிகவும் முக்கியமாகும்.

பின்வரும் வலைத்தளத்தில் உள்ளர் வீட்டுவசதிப் படி விகிதங்களை நீங்கள் சரிபார்த்துக் கொள்ளலாம்: https://lha-direct.voa.gov.uk/Secure/Default.aspx
நீங்கள் பணியில் இருந்து, உங்கள் வருமானம் குறைவாக இருந்தால், உங்களுக்கு சிறிதளவு வீட்டுவசதி மற்றும் குழு வரி ஆதாயம் பெறுவதற்கு தகுதி இருக்கக்கூடும், ஆனால் உங்கள் வருமானம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

## வீட்டு உரிமையாளர்கள் ஒரு வைப்புத்தொகையைக் கேட்கின்றனர் - என்னால் அதைக் கொடுக்க முடியவில்லை

பெரும்பாலான தனியார் வீட்டு உரிமையாளர்கள் எதிர்காலத்தில வீட்டிற்கு ஏற்படக்கூடிய பழுதுகள் அல்லது வாடகை பாக்கிகளை ஈடுசெய்வதற்காக ஒரு வைப்புத்தொகையை கேட்கக்கூடும். குடியிருப்பு காலத்தின் முடிவில் இத்தொகையை நீங்கள் திரும்பப் பெறுவதற்கு ஏதுவாக, அவர்கள் இந்த வைப்புத்தொகையை அரசினால் ஆதரவளிக்கப்படும் ஒரு திட்டத்தின் மூலம் பாதுகாக்க வேண்டும். இந்த பாதுகாப்பிற்கு உங்களுக்கு சட்டபூர்வமாக உரிமை உள்ளது, மற்றும் நீங்கள் வைப்புத்தொகையை செலுத்திய இரண்டு வாரங்களுக்குள் வீட்டு உரிமையாளர் இத்திட்டம் பற்றிய விவரங்களை உங்களுக்கு அளிக்கவிட்டால், நீங்கள் ஆலோசனையைப் பெற வேண்டும்.

குடியுரிமையின் தொடக்கத்தில் வாடகையை முன்கூட்டியே செலுத்துவதும் (பெரும்பாலும் ஒரு மாத வாடகை) வழக்கத்தில் உள்ளது. வைப்புத்தொகை அல்லது வாடகை முன்பணத்தை செலுத்தும் அளவிற்கு உங்களிடம் பணம் இல்லாவிட்டால், உங்கள் பகுதியில் ஒரு வாடகை உத்திரவாதம் அல்லது வாடகை வைப்புத் திட்டம் இருக்கலாம் - இவை பற்றி உங்கள் உள்ளூர் குழு அல்லது வீட்டுவசதி ஆலோசனை முகமைகள் உங்களுக்கு விவரமளிக்கக்கூடும்.

வாடகை முன்பணத்திற்காக வேலைவாய்ப்பு மையத்திலிருந்து ஒரு நிதிநிலைக் கடன் (Budgeting Loan) அல்லது நெருக்கடி நிலைக் கடனை பெறுவதற்கும் வாய்ப்புள்ளது, ஆனால் ஒருசில வகைகளைச் சேர்ந்த நபர்கள் மட்டுமே இதற்குத் தகுதி பெறுவார்கள், எனவே முதலில் உங்கள் வேலைவாய்ப்பு மையத்தை அணுகித் தெரிந்து கொள்ளவும்.

உங்களுக்கு ஜுன் 11, 2007 முதல் அகதி அந்தஸ்து அல்லது மனிதாபிமானப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தால், வாடகை வைப்புத்தொகைக்காக நீங்கள் ஓர் ஒருங்கிணைப்புக் கடன் (Integration Loan) பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். இது வட்டி இல்லாத கடனாகும். விண்ணப்பப் படிவம் மற்றும் வழிகாட்டும் குறிப்புகளை UKBA வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### ஒரு தனியார் குடியிருப்பாளராக உங்களுக்குள்ள உரிமைகள்

ஒரு வீட்டு உரிமையாளர் அளிக்கக்கூடிய ஒப்பந்தத்தின் வகை, வசூலிக்கப்படக்கூடிய வாடகை, தங்குமிடவசதியின் பழுது நிலை, அதில் வாழும் நபர்களின் பாதுகாப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் போதிய முன்னறிவிப்பின்றி குடியிருப்போர் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்கும் சட்டங்கள் உள்ளன.

உங்களுக்கும் உங்கள் வீட்டு உரிமையாளருக்கும் இடையிலான ஒப்பந்த விதிமுறைகளை குடியுரிமை ஒப்பந்தம் விளக்குகிறது. பல்வேறு விதமான குடியுரிமைகள் உள்ளன மற்றும் குடியுரிமையின் வகைக்கேற்ப உங்களுக்கு பல்வேறு உரிமைகள் இருக்கும். குடியுரிமை ஒப்பந்தத்தின் பிரதி ஒன்றையும், நீங்கள் வாடகை செலுத்தும் சான்றையும் நீங்கள் வைத்திருக்க வேண்டும். நீங்கள் வெளியேற வேண்டும் என்று வீட்டு உரிமையாளர் விரும்பினால், நீங்கள் வசிப்பதற்கு வேறிடம் பார்ப்பதற்கு ஏதுவாக, அவர் குறைந்தது ஒரு மாத கால முன்னறிவிப்பை அளிக்க வேண்டும் என்று பெரும்பாலான குடியுரிமை ஒப்பந்தங்கள் குறிப்பிடுகின்றன. ஒரு மாதத்திற்கும் குறைவான முன்னறிவிப்பில் நீங்கள் காலி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டால், ஆலோசனைக்காக உங்கள் உள்ளூர் குழுவிடமோ அல்லது சட்ட மையத்திற்கோ நீங்கள் செல்ல வேண்டும்.

### வேறு எங்காவது எனக்கு உதவி கிடைக்குமா?

உங்கள் உள்ளூர் குடிமக்கள் ஆலோசனை மன்றம் (Citizens Advice Bureau - CAB) உங்களுக்குக் மேலும் ஆலோசனை வழங்கக்கூடும். உங்கள் பகுதியில் வீட்டுவசதி ஆலோசனையை இலவசமாக வழங்கும் முகமைகளும் உள்ளன. உங்கள் உள்ளூர் CABயிடமிருந்து இது பற்றிய விவரங்களை நீங்கள் பெறலாம்.

## 4. உடல்நல பராமரிப்பு

யூகேயில், மருத்துவ சிகிச்சை தேவைப்படுவோருக்கு ஏராளமான உடல்நல சேவைகளை தேசிய சுகாதார சேவை (National Health Service - NHS) இலவசமாக வழங்கி வருகிறது. அதனை அது குடும்ப மருத்துவர்கள் (GPக்கள் என்று அழைக்கப்படுபவர்கள்), க்ளினிக்குகள், மருத்துவமனைகள், பல் மருத்துவர்கள், மகப்பேறு சேவைகள், கண் நிபுணர்கள் மற்றும் மருந்தாளர்கள் மூலம் மேற்கொள்கிறது. கருத்தடை அல்லது குடும்பக் கட்டுப்பாடு அகியவற்றிலும் NHS-ஆல் உதவ முடியும். சில வகையான NHS சிகிச்சைகளுக்கு நோயாளிகள் பணம் செலுத்த வேண்டுமென்றாலும், சில வகை சிகிச்சைகள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

## ஒரு GPயிடமிருந்து நான் எவ்வாறு மருத்துவ சிகிச்சை பெற முடியும்

யாராவது உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்டடிருந்தாலும், அவருக்கு உடனடி மருத்துவமனை சிகிச்சை தேவைப்படாவிட்டால், அவர் பொதுவாக உள்ளூர் மருத்துவமனையில் ஒரு GP-யை (ஒரு குடும்ப மருத்துவர்) பார்க்கச் செல்வார். GPக்களால் உடல்நலக் குறைவுகளைக் கண்டறிந்து சிகிச்சையளிக்க முடியும், ஆனால் அக்குறிப்பிட்ட உடல்நலக்குறைவுக்கு மேலும் சிறப்பாக சிகிச்சையளிக்கக்கூடிய மற்ற வல்லுனர்களிடம் அவர் உங்களைப் பரிந்துரைப்பார். பல நிகழ்வுகளில், மேற்கொண்டு சிகிச்சைக்காக ஒருவரை மருத்துவமனைக்கு அனுப்புவதையே இது குறிக்கிறது. நீங்கள் நோய்வாய்ப்படுவதற்கு முன்னதாகவே ஒரு GP-யிடம் நீங்கள் பதிவு செய்து கொள்வது மிகவும் முக்கியமாகும், ஏனென்றால் உங்கள் GP மூலமாக மட்டுமே மற்ற உடல்நல சேவைகளில் பெரும்பாலானவற்றை உங்களால் அணுக முடியும்.

நேரடி தேசிய சுகாதார சேவையின் நேரடி (NHS Direct)-ன் உதவி எண்ணான 0845 4647-ல் அழைப்பதன் மூலமும் நீங்கள் உடல்நல ஆலோசனை மற்றும் ஏதேனும் மருத்துவப் பிரச்னை குறித்த தகவல்களைப் பெறமுடியும். இந்த உதவி எண் 24 மணி நேரமும் இயக்கத்திலுள்ளதாகும். அவர்களது வலைத்தளமான www.nhsdirect.nhs.uk பொதுவான உடல்நலப் பிரச்னைகள் பற்றிய ஏராளமான தகவல்களைக் கொண்டுள்ளது.

## ஒரு GP-யை என்னால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும் மற்றும் நான் எவ்வாறு பதிவு செய்ய வேண்டும்?

உங்கள் அருகாமையிலுள்ள நூலகம், நேரடி வலைத்தளம், உங்கள் பகுதியில் வாழ்ந்துவரும் மக்கள் அல்லது நீங்கள் UKBA வழங்கியுள்ள தங்குமிட வசதியில் வாழ்ந்தால், உங்கள் வீட்டு உரிமையாளர் ஆகியோரிடமிருந்து உள்ளூர் மருத்துவர்களின் பட்டியல் கிடைக்கும். மிகச் சுலபமாக அணுகக்கூடிய ஒரு மருத்துவரை நீங்கள் தேர்ந்தெடுப்பதை உறுதி செய்து கொள்ளவும். நீங்கள் ஒரு பெண் GPயை தேர்ந்தெடுக்க விரும்பினால், அவ்வாறு செய்யலாம். பொதுவாக உள்ளூர் மருத்துவமனையானது, தங்கள் உள்ளூர் பகுதியில் வாழும் அல்லது தங்கியிருக்கும் மக்களை மட்டுமே ஏற்றுக் கொள்ளும். நீங்கள் போதிய அளவிற்கு ஆங்கிலம் பேசாதவராக இருந்தால், உங்கள் GPயை காண்பதற்கான முன்பதிவைச் செய்யும்போது உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் வேண்டும் என்று வரவேற்பாளரிடம் கூறவும்.

ஒரு மருத்துவரிடம் பதிவு செய்து கொள்வது என்பது, UKBAவிடமிருந்து பெறப்பட்ட உங்கள் அந்தஸ்து குறித்த கடிதம், மற்றும் இயலுமானால், உங்கள் முகவரிக்கான சான்று ஆகியவை காட்டப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஒரு மருத்துவரின் மருத்துவமனையானது பொதுவாக அவர்களது உள்ளூர் பகுதியில் வாழும் அல்லது தங்கியிருக்கும் மக்களை மட்டுமே ஏற்றுக் கொள்ளும்.

GP-க்கு ஏற்கனவே ஏராளமாக நோயாளிகள் இருந்தால், உங்களைப் பதிவு செய்து கொள்ள அவர்கள் மறுக்கக்கூடும். ஒரு GP-யுடன் பதிவு செய்து கொள்வதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், உங்கள் பகுதியில் உடல்நலப் பராமரிப்பு வழங்கப்படுவதை மேற்பார்வையிடும் ஓர் அமைப்பான உள்ளூர் ஆரம்ப சுகாதார அறக்கட்டளையை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும். பதிவு செய்தபின், மருத்துவமனையில் உள்ள ஒரு தாதி உங்களுக்கு ஒரு முழுமையான உடற்பரிசோதனையை மேற்கொள்வார். ஒரு GP-யுடன் நீங்கள் பதிவு செய்து கொண்டவுடன், நீங்கள் அவரை மருத்துவமனையில் காண்பதற்கான முன்பதிவுகளைச் செய்து கொள்ளலாம்.

## ஓர் அவசரகாலத்தில் என்ன செய்ய வேண்டும்?

உங்களுக்கு ஒரு விபத்து ஏற்பட்டாலோ அல்லது நீங்கள் கடுமையான உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டாலோ, நீங்கள் அருகாமையிலுள்ள மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசரநிலை (Accident and Emergency) துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும். அங்கு நீங்களாகவே செல்லலாம் என்றாலும், பெரும்பாலான நேரங்களில் மக்கள் 999-ஐ அழைத்து ஆம்புலன்ஸ்

வேண்டுமென்று கேட்க வேண்டும். அவசரகாலத்திற்கான மருத்துவ சிகிச்சைகள் எப்போதும் இலவசமாகவே செய்யப்படும்.

**மருந்துகள்**

உங்களுக்கு மருந்துகள் தேவைப்படும்போது உங்கள் GP ஒரு மருந்துச் சீட்டை எழுதித் தருவார், அதனை நீங்கள் ஒரு மருந்தாளரிடம் எடுத்துச் செல்ல வேண்டும். மருந்துச் சீட்டுகளுக்கு பெரும்பாலான வயதுவந்தோர் பணம் கொடுக்க வேண்டுமென்றாலும், நல நன்மைகளைப் பெறுபவர்கள் போன்ற சில வகைகளைச் சேர்ந்தவர்களுக்கு அவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

## 5. வயதுவந்தோருக்கான கல்வி

### மற்ற மொழிகள் பேசுவோருக்கான ஆங்கிலம் (English for Speakers of Other Languages - ESOL) என்றால் என்ன?

ESOL என்பது பெரும்பாலும் தொடர் கல்விக்கான கல்லூரிகளிலும், சமுதாய மையங்களிலும் கற்பிக்கப்படுகிறது. அது பணியில் அமைவதற்கும், படிப்பதற்கும் மற்றும் யூகேயில் வாழ்வதற்கும் உதவும் பொருட்டு, யூகே-க்கு வரும் குடிவரவாளர்களை இலக்காகக் கொண்டுள்ளது. பிரிட்டனின் குடியுரிமையைப் பெற விரும்பும் நபர்களுக்கு ESOL மிகவும் முக்கியமானதாகும்.

### நான் ESOL-ன் எந்த நிலையில் இருக்கிறேன் என்பதை நான் எப்படி அறிந்து கொள்வது?

ESOL-ல் ஆறு நிலைகள் உள்ளன. ESOL பாடப்பயிற்சியை எடுத்துக் கொள்வதற்காக நீங்கள் விண்ணப்பிக்கும்போது, அக்கல்லூரி அல்லது நிறுவனம் பொதுவாக ESOL-ன் எந்த நிலையில் நீங்கள் சேர வேண்டும் என்பதை முடிவு செய்வதற்கான மதிப்பீடு ஒன்றிற்கு ஏற்பாடு செய்யும்.

### ESOL பாடப்பயிற்சிக்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

ESOL பாடப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க, உங்கள் உள்ளூர் தொடர் கல்விக் கல்லூரியை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும். பாடப்பயிற்சிகள் பொதுவாக செப்டம்பர் மாதத்தில் தொடங்கும். பொருத்தமான ESOL பாடப்பயிற்சியை வழங்கும் கல்லூரி ஒன்றைக் கண்டுபிடிப்பதில் உங்களுக்கு சிரமம் ஏற்பட்டால், நீங்கள் வேலைவாய்ப்பு மையத்தைத் தொடர்பு கொண்டு உதவி கேட்க வேண்டும். பெரும்பாலான ESOL பாடப்பயிற்சிகள் நல நன்மைகளைப் பெறுபவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகின்றன.

### சர்வதேச ஆங்கில மொழி சோதனை அமைப்பு (International English Language Testing System - IELTS) என்றால் என்ன?

IELTS என்பது ஆங்கில மொழிக்கான ஒரு சர்வதேச நிலைப்படுத்தப்பட்ட சோதனை அமைப்பு முறையாகும். யூகேயில் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு பொதுவாக IELTS தேர்வை எடுத்துக் கொள்வது அவசியமாகும். தேர்வுக்கு தங்களைத் தயார் செய்து கொள்வதற்காக பெரும்பாலும் மக்கள் ஒரு தீவிர பாடப்பயிற்சிக்கு தங்களைப் பதிவு செய்து கொள்வதுண்டு. தேர்வு மையம் ஒன்றைக் கண்டறிவதற்கு தயவுசெய்து அணுகவும்
http://www.ielts.org/test_takers_information.aspx

## தொடர் கல்வி

### தொடர் கல்வி என்றால் என்ன?

தொடர் கல்வி என்பது கட்டாயமான கல்வியைக் கடந்த, ஆனால் பட்டய நிலை (உயர்நிலை)க்குக் குறைவான கல்வியின் வகைகளைக் குறிக்கிறது. உண்மையில் இது A நிலைகள், AS நிலைகள் (A Levels, AS Levels), BTEC, மற்றும் தொழிற்கல்வித் தகுதிகள் போன்ற பாடப்பயிற்சிகளை உள்ளடக்கியதாக இருக்கும். பட்டய நிலை பாடப்பயிற்சிகளுக்கு ஏற்கப்படுவதற்கு பொருந்தும் தொடர் கல்வித் தகுதிகளை முடித்திருப்பது பெரும்பாலும் அவசியமாகும்.

### தொடர் கல்வி பாடப்பயிற்சிகளுக்காக நான் பணம் செலுத்த வேண்டுமா?

பெரும்பாலான தொடர் கல்விப் பாடப்பயிற்சிகள் அகதிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

### தொடர் கல்வி பாடப்பயிற்சிகளுக்காக நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

பெரும்பாலான தொடர் கல்விப் பாடப்பயிற்சிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு, நீங்கள் குறிப்பிட்ட நிறுவனம் அல்லது கல்லூரியை நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும்.

## உயர் கல்வி

### உயர் கல்வி என்றால் என்ன?

உயர் கல்வி என்பது, பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் பட்டய நிலை பாடப்பயிற்சிகளைக் குறிக்கிறது.

### உயர் கல்வி பாடப்பயிற்சிகளுக்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

**UCAS** என்றழைக்கப்படும் ஓர் அமைப்பின் மூலம் நீங்கள் பாடப்பயிற்சிகளைத் தேடலாம் மற்றும் அவற்றிற்கு விண்ணப்பிக்கலாம்.
மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து அணுகவும்: www.ucas.com அல்லது 0871 468 0 468 என்ற எண்ணில் அழைக்கவும்.

### எந்த நிலைக்கான கற்பித்தல் கட்டணத்தை நான் செலுத்த வேண்டும்?

உங்களுக்கு தங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டடிருந்தால், ‘உள்நாட்டுக் கட்டணத்திற்கு’ (‘home fees’) நீங்கள் தகுதி பெறுவீர்கள். அதாவது, பிரிட்டன் நாட்டைச் சேர்ந்தவர் ஒருவருக்கு விதிக்கப்படும் அதே கற்பித்தலுக்கான கட்டணம் உங்களிடமிருந்தும் வசூலிக்கப்படும். அயல்நாட்டு மாணவர்களுக்கான கற்பித்தல் கட்டணம் மிக உயர்ந்த விகிதங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

‘அயல்நாட்டு கட்டணங்கள்’ (‘overseas fees’) செலுத்துபவராக உங்கள் பாடப்பயிற்சியை நீங்கள் தொடங்கியிருந்து, பாடப்பயிற்சி நடந்து கொண்டிருக்கும்போதே உங்களுக்கு தங்குவதற்கான அனுமதி அளிக்கப்பட்டிருந்தால், உங்கள் அந்தஸ்தில் எற்பட்டுள்ள மாற்றம் குறித்து உங்கள் கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்திற்கு நீங்கள் தெரிவித்து, அதற்கான சான்றையும் காட்ட வேண்டும். அதன்பின் அவர்கள் உங்கள் அடுத்த ஆண்டிற்கான கல்விக்கு உங்களிடமிருந்து ‘உள்நாட்டுக் கட்டணம்’ தான் வசூலிக்க வேண்டும்.

தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒருவருடைய குழந்தையாகவோ, வாழ்க்கைத்துணையாகவோ அல்லது பொதுவியல் துணையாகவோ நீங்கள் இருந்தால்,

‘உள்நாட்டுக் கட்டணத்திற்கு’ நீங்கள் தகுதி பெறுவீர்கள். உங்கள் குடும்ப உறுப்பினரின் அடைக்கல அந்தஸ்திற்கான சான்றையும் உங்களுக்கு அவர்களுடன் உள்ள உறவுக்கான சான்றையும் உங்கள் கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் பார்க்க விரும்பக்கூடும்.

## மாணவர் உதவி

### மாணவர் உதவி என்றால் என்ன?

மாணவர் உதவி என்பது, தங்கள் கற்பித்தலுக்கான கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவுகளுக்கு உதவுவதற்காக மாணவர்கள் விண்ணப்பிக்கக்கூடிய பல்வேறு விதமான மான்யங்கள் மற்றும் கடன்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெயராகும். பின்வரும் பாடப்பயிற்சிகளில் ஒன்றை நீங்கள் பயின்று வந்தால் மட்டுமே அது உங்களுக்குக் கிடைக்கும்:

- பட்டதாரிக்குக் கீழ்நிலை பட்டயம்
- உயர் தேசிய பட்டயம் (Higher National Diploma - HND)
- உயர் தேசிய சான்றிதழ் (Higher National Certificate - HNC)
- உயர் கல்விப் பட்டயம் (Diploma of Higher Education)
- ஆசிரியர் பயிற்சிப் பாடம்

மாணவர் உதவி என்பது கீழ்க்கண்டவற்றைக் கொண்டதாகும்:

- கற்பித்தல் கட்டணங்களுக்காக கடன்
- வாழ்க்கைச் செலவுகளுக்காக கடன்
- குறிப்பிட்ட மாணவர் வகைகளுக்கு வழங்கப்படும் சில துணை மான்யங்கள்
- மிகக் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் £2835 வரையிலான, திரும்பச் செலுத்த வேண்டியிராத மான்யம்.

### மாணவர் உதவிக்கு விண்ணப்பிக்க எனக்கு தகுதி உள்ளதா?

உங்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தால், மாணவர் உதவிக்கு விண்ணப்பிப்பதற்கு நீங்கள் தகுதி பெறுவீர்கள். மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி அல்லது காலவரையறையின்றி இருக்க அனுமதி ஆகியவை உங்களுக்கு வழங்கப்பட்டிருந்தால், மாணவர் உதவிக்கு விண்ணப்பிக்க, நீங்கள் யூகேயில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்.

### மாணவர் உதவிக்கு நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?

மாணவர் உதவிக்கு விண்ணப்பிக்க, நீங்கள் **உள்ளூர் கல்வி அமைப்பு (Local Education Authority)**-க்கு நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும். இது உள்ளூர் குழுவில் இடம்பெற்றுள்ள கல்வித் துறையாகும்.

மாணவர் உதவி குறித்த மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து அணுகவும்: http://www.direct.gov.uk/en/EducationAndLearning/UniversityAndHigherEducation/StudentFinance/index.htm

முதுநிலை பாடப்பயிற்சிகளுக்கான நிதியுதவி பற்றிய விவரங்களுக்கு, தயவுசெய்து அணுகவும்: http://www.direct.gov.uk/en/EducationAndLearning/UniversityAndHigherEducation/ChoicesAfterYouGraduate/DG_10012463

### யூகேயில் அங்கீகாரம் பெறுவதற்கு ஏற்ற வகையில் என்னுடைய தற்போதைய கல்வித் தகுதிகளை நான் எவ்வாறு எப்படி மாற்றிக்கொள்ள வேண்டும்

அயல்நாட்டில் நீங்கள் ஏற்கனவே பெற்றுள்ள கல்வித்தகுதிகள் பற்றியும், யூகே கல்வித்தகுதிகளுக்கு நிகராக அவை யூகேயில் அங்கீகரிக்கப்படுமா என்பதைப் பற்றியும் விவரங்களைப் பெறுவதற்கு, நீங்கள் **தேசிய பாடத்திட்ட அங்கீகார தகவல் மையம் (National Academic Recognition Information Centre - NARIC)**-யை தொடர்பு கொள்ள வேண்டும். பொதுவான விசாரணைகளுக்கான பதில்களை நீங்கள் இலவசமாகப் பெறுவீர்கள், ஆனால் உங்கள் கல்வித்தகுதி பற்றிய ஓர் எழுத்துமூல மதிப்பீடு உங்களுக்குத் தேவைப்பட்டால், அதற்கு £47 செலவாகும். மேலும் விவரங்களுக்கு NARIC-யை 0871 330 7033 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

யூகேயில் தங்கள் வாழ்க்கைத் தொழில்களைத் தேடிக்கொள்வதற்காக குறிப்பிட்ட திறன்களைப் பெற அகதிகளுக்கு உதவும் சிறப்பு அமைப்புகளும் உள்ளன:

அகதி ஆசிரியர்கள் – www.refugeesintoteaching.org.uk
அகதி பொறியாளர்கள் – www.olmec-ec.org.uk/main.cfm?Type=SF&MenuId=344
அகதி உடல்நர பராமரிப்பு நிபுணர்கள் – www.rose.nhs.uk

### எனது திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கும், பணியை தேடிக்கொள்வதற்கும் நான் எடுத்துக் கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் பாடப்பயிற்சிகள் உள்ளனவா?

ஏராளமான வகை பாடப்பயிற்சிகளும் உள்ளன. நீங்கள் ஆர்வம் காட்டக்கூடிய பாடப்பயிற்சி ஒன்றைக் கண்டறிவதற்கு, தயவுசெய்து அணுகவும் http://careersadvice-findacourse1.direct.gov.uk/pls/hot_ca/ld_all_home.page_pls_all_home_adv

வயதுவந்தோர் கல்வி பற்றிய மேலும் விசாரணைகளுக்கு, நேரடி கற்றல் (Learn Direct)-ஐ 0800 1011901 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது அணுகவும் www.learndirect.co.uk

### தன்னார்வப் பணி செய்வதற்கு எனக்கு ஆர்வம் உள்ளது

உங்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்பை தன்னார்வப் பணி மேம்படுத்துவதுடன், அது பணம் எதையும் ஈடாகப் பெறாமல் உங்கள் நேரம் மற்றும் திறன்களை அளிப்பதன் மூலம் பரவலாக உள்ள சமுதாயத்தில் மற்றவர்களுக்கு உதவக்கூடிய ஒரு வழியுமாகும்.

அது யூகேயின் பணிக் கலாச்சாரத்தை நீங்கள் நன்றாக அறிந்து கொள்ளவும், புதிய திறன்கள் மற்றும் அனுபவங்களைப் பெறவும், உங்கள் ஆங்கிலத்தை மேம்படுத்திக் கொள்ளவும் மற்றும் ஒரு வேலைக்கு விண்ணப்பிப்பதற்காக ஒரு பரிந்துரையைப் பெறவும் உதவும்.

www.volunteering.org.uk அல்லது http://jobseekers.direct.gov.uk என்ற வலைத்தளத்தில் தன்னார்வப் பணி பற்றி மேலும் விவரங்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

## 6. பயண ஆவணங்கள்

உங்களுக்கு அகதி அந்தஸ்து, மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி அல்லது காலவரையறையின்றி இருக்க அனுமதி ஆகியவை இருந்தால், உங்கள் குடிவரவு அந்தஸ்து ஆவணத்தை மாற்றியமைப்பதற்காக ஒரு பயண ஆவணத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். பயண ஆவணங்களை ஓர் அலுவல் சார்ந்த ID-யாகவும், யூகே-க்கு வெளியே பயணம் செய்வதற்கான ஆவணமாகவும் பயன்படுத்தலாம். பயண ஆவணத்தின் மூலம் உங்கள் தாய் நாட்டிற்கு உங்களால் செல்ல முடியாது, மற்றும் யூகே-க்கு வெளியே உள்ள பெரும்பாலான நாடுகளுக்கு பயணம் செல்வதற்கு முன் நீங்கள் ஒரு விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மூன்று வகையான பயண ஆவணங்கள் உள்ளன. யூகேயில் உங்களுக்கு என்ன அந்தஸ்து உள்ளது என்பதன் அடிப்படையிலேயே நீங்கள் விண்ணப்பிக்கும் ஆவணமும் அமையும்.

**பாரம்பரிய பயண ஆவணம் (Convention Travel Document): அகதி அந்தஸ்து**
**பயணச் சான்றிதழ் (Certificate of Travel): மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி, தங்குவதற்கான விசேஷ அனுமதி, காலவரையறையின்றி இருக்க அனுமதி**

அவை உங்களுக்குப் பொருந்துமானால், உங்கள் தேசிய அமைப்புகள் உங்களுக்கு ஒரு பாஸ்போர்ட் வழங்க 'அலுவல் சார்ந்த முறையிலும் அநியாயமாகவும்' மறுத்துவிட்டதை நீங்கள் UKBAவிற்குக் காட்ட வேண்டும். உங்கள் தேசிய அமைப்புகளிடம் உங்களுக்கு அச்சம் இருந்தால், மற்றும் இது உங்கள் அடைக்கல கோரிக்கையின் ஒரு பகுதியாக இருந்தால், நீங்கள் இதைச் செய்ய வேண்டியதில்லை. உங்கள் சூழ்நிலை இதுவாக இருந்தால், பயணச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும் முன் ஒரு சட்டப் பிரதிநிதியிடம் அல்லது ஓர் அகதி சமுதாய அமைப்பிடம் நீங்கள் மேலும் ஆலோசனை பெற வேண்டும்.

**நாடற்ற நபருக்கான பயண ஆவணம் (Stateless Person's Travel Document): நாடற்ற நபர்**

**பயண ஆவணங்களுக்காக விண்ணப்பித்தல்**

இந்த மூன்று ஆவணங்களுக்கான கட்டணங்கள் வேறுபடும், ஆனால் குழந்தைகளின் ஆவணங்களுக்கு ஆகும் செலவு குறைவாகும். பின்வரும் UKBA-வின் வலைத்தளத்திலிருந்து அச்சிட்டுக் கொள்ளக்கூடிய ஓர் உள்துறை அலுவலக பயண ஆவண படிவத்தை (TD112) பூர்த்தி செய்வதன் மூலம் நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும்: www.ukba.homeoffice.org.uk

படிவத்தின் கடைசிப் பக்கத்தை ஒரு தொழில்சார்ந்த நபர் பூர்த்தி செய்ய வேண்டும். இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களின் பின்புறம் அவர்கள் பின்வருமாறு எழுதவும் வேண்டும்: 'இது உண்மையாகவும் சரியாகவும் இவரை ஒத்திருக்கிறது' ('This is a true and correct likeness of') மற்றும் அதைத் தொடர்ந்து உங்கள் பெயர், உள்துறை அலுவலகத்தின் குறிப்பெண் மற்றும் அவருடைய கையொப்பம் அதில் இருக்க வேண்டும்.

ஒரு தொழில்சார்ந்த நபர் கீழ்க்கண்டவர்களில் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் உங்கள் குடும்ப உறுப்பினராக இருக்கக்கூடாது:

- மருத்துவர்
- மதத் தலைவர்
- சமூகப் பணியாளர்
- காவல்துறை அலுவலர்
- ஆசிரியர்
- நீதிபதி
- சிறை அலுவலர்
- வங்கி மேலாளர்
- வழக்கறிஞர்
- குடிவரவு ஆலோசகர் (OISC நிலை ஒன்று/AAS நிலை ஒன்று)

உங்கள் பயண ஆவண விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு நீங்கள் யாருக்கும் பணம் தர வேண்டியதில்லை. நீங்கள் UKBA-விற்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டும். உங்கள் பயண ஆவணத்துடன் உங்கள் குடிவரவு அந்தஸ்து ஆவணத்தின் அசலை அனுப்ப வேண்டாம், ஆனால் அதன் நகலை அனுப்பவும்.

வரவு அட்டை, காசோலை அல்லது அஞ்சல் ஆணை (Postal Order) மூலம் நீங்கள் UKBA-விற்கு (Home Office-ன் பெயரில் எடுக்கப்பட்டது) பணம் செலுத்தலாம். அஞ்சலகத்திலிருந்து அஞ்சல் ஆணையை நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்.

உங்கள் விண்ணப்பத்தை அவர்கள் மறுத்தாலோ அல்லது நீங்கள் அதனை விலக்கிக் கொண்டாலோ, உங்கள் பணத்தை UKBA திரும்ப அளிக்காது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும், எனவே, நீங்கள் விண்ணப்பிக்கும் பயண ஆவணத்திற்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்களா மற்றும் அவர்களுக்குத் தேவைப்படக்கூடிய சான்றுகள் அனைத்தையும் உடன் இணைத்திருக்கிறீர்களா என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். பயண ஆவணங்கள் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு, அணுகவும் www.ukba.homeoffice.gov.uk

## 7. குடும்ப மறுஇணைப்பு

### என் குடும்பத்தால் யூகேயில் என்னுடன் வந்து வாழ முடியுமா?

உங்களுக்கு அகதி அந்தஸ்து இருந்து, ஆனால் உங்கள் குடும்பம் யூகே-க்கு வெளியே இருக்குமானால், உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த சிலரால் உங்களுடன் யூகேயில் வாழ முடியலாம். யுகேயைவிட்டு நீங்கள் செல்வதற்குமுன் நீங்கள் மணம் செய்து கொண்ட கணவர்/மனைவி, அல்லது 18 வயதிற்குக் குறைவான குழந்தைகள் உங்களுக்கு இருந்தால், உங்களைப்போன்ற அதே அந்தஸ்தைப் பெறுவதற்கு அவர்களும் விண்ணப்பிக்கலாம். சில நிகழ்வுகளில் மற்ற குடும்ப உறுப்பினர்களாலும் விண்ணப்பிக்க முடியும்.

இது குடும்பத்தின் மறுஇணைப்பு என்று அழைக்கப்படுகிறது, மற்றும் ஒரு சட்டபூர்வ பிரதிநிதி விண்ணப்பங்களை அளிக்க வேண்டும். உங்கள் அடைக்கல விண்ணப்பத்தை அளிப்பதற்கு உங்களுக்கு உதவிய சட்டபூர்வ பிரதிநிதி இதிலும் உங்களுக்கு உதவக்கூடும். நீங்கள் வேலையில் இல்லாவிட்டால், சட்டபூர்வ பிரதிநிதியின் பொருட்டு உங்களுக்கு செலவு எதுவும் ஏற்படாது. உங்கள் குடும்பம் யூகே-க்கு வருவதற்கு முன்னதாக, அவர்களுக்கு உங்களால் ஆதரவு தரமுடியும் என்பதை நீங்கள் UKBA-விற்குக் காட்ட வேண்டியதில்லை. நீங்கள் அகதி அந்தஸ்தைப் பெற்ற உடனேயே குடும்ப மறுஇணைப்பிற்கான விண்ணப்பத்தையும் நீங்கள் அளிக்கலாம்.

மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி அல்லது காலவரையறையின்றி இருக்க அனுமதி ஆகியவை உங்களுக்கு இருந்தால், மற்றும் குடும்ப மறுஇணைப்புக்கு விண்ணப்பிக்க நீங்கள் விரும்பினால், ஒரு சட்டப் பிரதிநிதியிடம் நீங்கள் ஆலோசனை பெற வேண்டும். யூகேயில் குடும்ப மறுஇணைப்பு பற்றி மேலும் விவரங்கள் அறிவதற்கு, தயவுசெய்து அணுகவும் www.ukba.homeoffice.gov.uk

## 8. ஒரு வங்கிக் கணக்கை துவக்குதல்

### என்னால் ஒரு வங்கிக் கணக்கை துவக்க முடியுமா?

அகதி அந்தஸ்து, மனிதாபிமானப் பாதுகாப்பு, தன்விருப்பத்தினாலான அனுமதி அல்லது காலவரையறையின்றி இருக்க அனுமதி ஆகியவை உங்களுக்கு இருந்தால், நீங்கள் ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்க முடியும். ஆனால் இதுவும் பல சமயங்களில் சிரமமாக இருக்கக்கூடும், ஏனென்றால் வங்கிகளுக்கு ஏராளமான விவரங்கள் தேவைப்படலாம்.

ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்குவதற்கு, உங்கள் அடையாளம், குடிவரவு அந்தஸ்து மற்றும் உங்கள் முகவரியைக் கொண்டுள்ள ஆவணங்களை நீங்கள் வங்கிக்கு அளிக்க வேண்டும். ஒரு சில வங்கிகளுக்கு மற்ற வங்கிகளைக் காட்டிலும் அதிக விவரங்கள் தேவைப்படும். **குறைந்தபட்சமாக** கீழ்க்கண்டவற்றை நீங்கள் காட்ட வேண்டும்:

- **ஏதேனும் ஒரு வடிவத்தில் புகைப்படத்துடன்கூடிய அடையாள ஆவணம்:** குடிவரவு அந்தஸ்து ஆவணம், ஓட்டுனர் உரிமம், செல்லத்தக்க பாஸ்போர்ட் (ARC அட்டைகள் செல்லாது)
- **முகவரிக்கான ஒரு சான்று:** UKBAவிடமிருந்து வந்துள்ள கடிதங்கள், உங்கள் பெயர் கொண்ட பில்கள், வேலைவாய்ப்பு மையத்திலிருந்து பெறப்பட்ட கடிதங்கள்

இதைவிடக் கூடுதலான விவரங்களையும் ஒரு வங்கி கேட்கக்கூடும், உதாரணமாக, உங்கள் வருமானத்திற்கான சான்று.

### அஞ்சலக அட்டை கணக்கு (Post Office Card Account)

உங்களால் ஓர் வங்கிக் கணக்கைத் தொடங்க முடியாவிட்டால், ஓர் அஞ்சலக அட்டைக் கணக்கை உங்களால் தொடங்க முடியலாம். அஞ்சலக அட்டைக் கணக்குகள் வங்கிக் கணக்குகளைப் போன்றவையே ஆகும். வங்கிக் கணக்கைத் தொடங்குவதைவிட அஞ்சலக அட்டைக் கணக்கைத் தொடங்குவது சுலபமாகும்.

உங்களுக்கு ஒரு **'வரவேற்புக் கடிதம்'** ('Invitation Letter') வழங்கும்படி உங்கள் உள்ளூர் வேலைவாய்ப்பு மையத்தைக் கேட்டுக் கொள்ளவும், ஏனென்றால், நீங்கள் ஓர் அஞ்சலக அட்டைக் கணக்கை துவக்க வேண்டியிருக்கலாம். கணக்கைத் தொடங்குவதற்கு இக்கடிதத்தை உங்கள் உள்ளூர் அஞ்சலகத்திற்கு எடுத்துச் செல்லவும்.

## 9. சட்ட ஆலோசனை

நீங்கள் பணியில் இல்லாமல், மற்றும் மிகக் குறைந்த வருமானம் மட்டுமே பெற்று வந்தால், உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனை கிடைக்க வேண்டும். உங்கள் சட்ட உதவிக்கான கட்டணங்களை யூகே அரசு செலுத்தும், இது **சட்ட உதவி** (Legal Aid) என்றழைக்கப்படுகிறது. சட்டப் பிரதிநிதிகள் தங்களை வழக்கறிஞர்கள், வக்கீல்கள் அல்லது சட்ட ஆலோசனையாளர்கள் என்று அழைத்துக் கொள்ளக்கூடும்.

நீங்கள் பணியில் இல்லாமல், மற்றும் வருமானம் ஏதுமின்றி இருந்தால், உங்கள் சட்டப் பிரதிநிதி உங்களிடம் சட்ட உதவிக்கான கட்டணங்களை வசூலிக்கக்கூடாது. அவ்வாறு அவர் செய்தால், நீங்கள் ஒரு புதிய சட்டப் பிரதிநிதியை அமர்த்திக் கொள்ள வேண்டும்.

சட்ட உதவியுடன் பணிபுரியும் ஒரு சட்டப் பிரதிநிதியைக் கண்டுபிடிப்பதற்கு, உங்கள் உள்ளூர் சட்ட மையத்தை http://www.lawcentres.org.uk என்ற வலைத்தளத்தில் தொடர்பு கொள்ளவும் அல்லது பின்வரும் சமுதாய சட்ட ஆலோசனை (Community Legal Advice) வலைத்தளத்தைப் பார்க்கவும்: http://www.communitylegaladvice.org.uk/ அல்லது 0845 345 4345என்ற எண்ணில் அழைக்கவும்.